# மயிலாடுதுறை நகராட்சி

**குறள் :** தோன்றின் புகழோடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று

**பொருள்:** எந்த துறையில் ஈடுபட்டாலும் அதில் புகழுடன் விளங்க வேண்டும். இயலாதவர்கள் அந்த துறையில் ஈடுபடாமல் இருப்பதே நல்லது.

கூட்ட எண்: 30 /2024

நகராட்சி அலுவலகம்
மயிலாடுதுறை

நாள்: 27.08.2024.

## சாதாரணக்கூட்டம்

அன்புடையீர்!

பொருள்: கூட்டம் – மயிலாடுதுறை நகராட்சி – சாதாரணக்கூட்டம் நடைபெறுதல் – சம்மந்தமாக.

*****

மயிலாடுதுறை நகர்மன்ற சாதாரணக்கூட்டம் 2024–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29.08.2024–ந்தேதி வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் நகர்மன்றத்தலைவர் தலைமையில் நகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள நகர்மன்ற கூட்டரங்கில் நடைபெறும் சாதாரணக்கூட்டத்திற்கு தாங்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

தங்கள் அன்பார்ந்த

(நா. செல்வராஜ்)
நகர்மன்றத் தலைவர்,
மயிலாடுதுறை நகராட்சி.

**1)** நகராட்சி ஆணையர், பொறியாளர், நகர்நல அலுவலர் ஆகியோர்களின் ஜுன் மற்றும் ஜுலை மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் பதிவு செய்து ஒப்புதல் வழங்கலாம்.

**மன்றத்தீர்மானம் எண். 782, நாள்.29.08.2024**

**அலுவலக குறிப்பு: ஒப்புதல் வழங்கப்பட்டது.**

**2)** மயிலாடுதுறை நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்.4 கூறைநாடு தட்டாரத்தெருவில் அமைந்துள்ள சமுதாயக்கூடத்தினை மயிலாடுதுறை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகம் இயங்க சமுதாயக்கூடத்தினை மாத வாடகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்யுமாறு காவல் கண்காணிப்பாளர், மயிலாடுதுறை அவர்களின் 26.08.2020ந்தேதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டு, சமுதாயக்கூடத்தின் வாடகை மதிப்பீடு மாதத்திற்கு ரூ.1,32,715/- என நகராட்சி உதவிப்பொறியாளர் கணக்கீட்டின்படி தெரிவிக்கப்பட்டது. மேலும் 01.09.2022 முதல் 31.08.2025 வரையிலான காலத்திற்கு இந்நகர்மன்ற தீர்மான எண்.121, நாள்:22.07.2022 மன்ற அனுமதி பெறப்பட்டு குத்தகை உரிமம் ஒப்படைக்கப்பட்டது. மேற்படி மாத வாடகை அதிகமாக உள்ளது அதனை குறைத்து வாடகை விதிக்குமாறு காவல் கண்காணிப்பாளர், மயிலாதுறை அவர்களின் 04.01.2021ந்தேதிய மேல்முறையீட்டு கடிதத்தில் தெரிவிக்கப்பட்டு, தற்போது பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் மயிலாடுதுறை அவர்களின் 02.11.2023ந்தேதி கடிதத்தின்படியும், 01.06.2024ந்தேதிய நகராட்சி செயற்பொறியாளர் அறிக்கையின்படியும் மாத வாடகை ரூ.127373/– நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி சமுதாய கூடத்தினை 01.09.2022 முதல் மாத வாடகையாக (குடிநீர் மின்சாரம் தவிர்த்து) ரூ.127373/– நிர்ணயம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.5050/2016/அ2.**

**மன்றத்தீர்மானம் எண். 783, நாள்.29.08.2024**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது**

**3)** மயிலாடுதுறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்:9–ற்கான சாதாரண உள்ளாட்சி தேர்தல்–2022 இல் திரு.ஜெ.லிங்கராஜன் என்பவர் போட்டியிட்டது தொடர்பாக திருமதி.மா.தனலெட்சுமி க/பெ.மாசிலாமணி என்பவரால் நாகப்பட்டினம் மாவட்ட நீதிமன்ற வழக்கு எண்:EOP No:179/2022 மற்றும் மயிலாடுதுறை மாவட்ட நீதிமன்ற வழக்கு எண்:ELOP No:47/2023. வழக்கு தொடர்பாக நகராட்சி சார்பில் வழக்கில் ஆஜராகிட நகராட்சி நிலை வழக்கறிஞர் திரு.S.சங்கரநாராயணன் அவர்களும் மற்றும் தமிழ்நாடு தேர்தல் ஆணையம் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர், மயிலாடுதுறை அவர்கள் சார்பில் அரசு வழக்கறிஞர் திரு.C. அருள்தாஸ் அவர்களும் வழக்கில் ஆஜராகி எதிர்வாதுரை தாக்கல் செய்துள்ளனர். எனவே, மேற்கண்ட வழக்கிற்கான வழக்கறிஞர் கட்டணம் ரூ.20000/– (ரூபாய் இருபதாயிரம் மட்டும்)–ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**: மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்:**2402/2022/எப்1

**மன்றத்தீர்மானம் எண். 784, நாள்.29.08.2024**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது**

**4)** மயிலாடுதுறை நகராட்சிக்குட்பட்ட கூறைநாடு வார்டு எண்:3, பிளாக் எண்:29, நகரளவு எண்கள்:1001/1,2, 1003/1,2 மற்றும் 1004 ஆகியவற்றில் அமைந்துள்ள நாச்சிமுத்து நகர் என்ற மனைப்பிரிவில் உள்ள பொது உபயோக இடம் தொடர்பாக உச்சநீதிமன்றத்தில் மனைப்பிரிவு உரிமையாளர் திரு, P.பிரதான்பாபு த/பெ. V.பழனிவேலு என்பவரால் தொடரப்பட்டுள்ள வழக்கு எண்:S.L.P(Civil)8130/2022–இல் மயிலாடுதுறை நகராட்சி ஆணையரை மூன்றாம் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டுள்ளது. மேற்கண்ட வழக்கில் உச்சநீதிமன்ற வழக்கறிஞர் திரு.V.பாலசந்திரன் M/S KSN &Co புது டெல்லி என்பவரை நகராட்சி சார்பில் ஆஜராகி வழக்கு நடத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் மேற்கண்ட வழக்கிற்கான வழக்கறிஞர் கட்டணம் உட்பட உத்தேச செலவினம் ரூ.2,00,000/– (ரூபாய் இரண்டு லட்சம் மட்டும்)–ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**: மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்:**2164/2022/எப்1

**மன்றத்தீர்மானம் எண். 785, நாள்.29.08.2024**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது**

**5)** இவ்வலுவலக தட்டச்சு பிரிவு, கணினி பிரிவு மற்றும் பொறியியல் பிரிவில் பயன்படுத்தி வரும் Kyocera Printers கள் மிகவும் பழுதடைந்துள்ளதால் அலுவலக பணிகள் பெரிதும் பாதிப்படைகிறது. எனவே மேற்கண்ட மூன்று பிரிண்டர்களையும் வாங்கிய Marvel Computer selam நிறுவனத்தினத்திடம் பழுது நீக்கம் செய்து மீள பயன்படுத்த ஆகும் உத்தேச செலவினம் ரூ.40,000/– மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.
**ந.க.எண்.** /2024/ டி2

**மன்றத்தீர்மானம் எண். 786, நாள்.29.08.2024**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது**

**6)** இந்நகராட்சியில் 2024-2025 ஆம் நிதியாண்டிற்கு அலுவலக உபயோகத்திற்கு தேவையான படிவங்கள், பதிவேடுகள், மற்றும் இதர பொருட்கள் மயிலாடுதுறை மாவட்ட அச்சக சேவை கூட்டுறவு நிறுவனம், மயிலாடுதுறை இருந்து கொள்முதல் செய்ய, உத்தேச செலவினம் ரூ.10,00,000/– க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.
**ந.க.எண்.** /2024/டி2

**மன்றத்தீர்மானம் எண். 787, நாள்.29.08.2024**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது**

7) இந்நகராட்சி பாதாள சாக்கடை திட்ட இயக்குதல் மற்றும் பராமரிப்பில் உள்ள கழிவு நீரேற்று நிலையம் II-ல் உள்ள 20 HP mm clog motor submersible pump set, IV –ல் உள்ள 30 HP mm clog motor submersible pump set, மற்றும் தரங்கம்பாடி சாலையில் உள்ள தற்காலிக கழிவு நீர் உந்து நிலைய 7.5 HP mm clog motor submersible pump set -கள் மின்னழுத்த வேறுபாடு மற்றும் திடக்கழிவுகளால் கூடுதல் வெப்பநிலை அடைந்து மோட்டார் வைன்டிங் பழுதடைந்ததோடு, பம்புகளின் மோட்டார் மற்றும் பம்ப் மெக்கானிக்கல் சீல், Tops Bottom Bearings, "O" rigs slaft, impellor Lock arrangements உதிரிபாகங்கள் பழுதடைந்து இயக்க இயலாத நிலை உள்ளன.

மேற்காணும் விவரப்படி பழுதான மோட்டார் பம்ப் உள்ள கழிவு நீரேற்று நிலையங்களில் ஏற்கெனவே Stand by motor pump இல்லாத நிலையால் உடன் இந்த மோட்டார் பம்ப்களை பழுது நீக்கம் செய்ய வேண்டிய நிலை உள்ளன. கழிவு நீரேற்றத்திற்கு சிறப்பினமாக கழிவு நீர் உட்புகாமல் கழிவு நீர் சேகரிப்பு கிணற்றுக்குள்ளேயே இயங்கும் வகையில் உள்ள நீர் மூழ்கி இறைப்பான் வடிவமைப்பு சாதாரண நீர் மூழ்கி இறைப்பான் போல இல்லாது எந்நிலையிலும் நீர் உட்புகாமல் இருக்க மோட்டார் மற்றும் பம்புகளில் மெக்கானிக்கல் சீல், impellor lack, seal monitor Elactrode, Coolering oil மற்றும் Thermisors for thermal protection ஆகிய பாதுகாப்பு உபகரணங்கள் உள்ளதால் உள்ளூர் மோட்டார் வைன்டிங் பணிமனைகளில் பழுது நீக்கம் செய்ய இயலாது, உள்ளூர் விலைப்புள்ளி கோரினாலும், இந்த உதிரிபாகங்களை தயாரிப்பு நிறுவன சர்வீஸ் முகவரிடம் பெற்று அதனை உரிய முறையில் பொருத்தம் செய்யபட்டால் மட்டும் நீண்டகால, பயனளிக்கும வகையில் செய்து வழங்க இயலாத நிலை ஏற்படுகிறது.

மேற்கூரிய நிலைகளின்படி பழுதான ஒரு 30 HP, ஒரு 20 HP, ஒரு 7.5 HP mm clog submersible motor pump –ன் உரிய முறையில் பழுது நீக்கம் செய்ய இந்த மோட்டார் பம்பின் உற்பத்தி நிறுவனமான M/S Kishor Pumps –ன் நேரடி சர்வீஸ் முகவரான M/S AISH TECHNOLOGIES PRIVATE LIMITED, CHENNAI அவர்களின் மூலமாக பழுது நீக்கும் பணிகளை மேற்கொள்ளவும், இப்பணிக்கான மதிப்பீடு செலவினம் ரூ.8,50,000/- நகர்புற நகராட்சிகள் சட்டம் 2023 –விதி எண்:235 பிரி-3-ன் கீழ் நிர்வாக அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** 1. மன்றம் பதிவு செய்யலாம்.

**ந.க.எண்.** 0360 /2023/இ1

**மன்றத்தீர்மானம் எண். 788, நாள்.29.08.2024**

**அலுவலக குறிப்பு: பதிவு செய்யப்பட்டது**

8) மயிலாடுதுறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.17 இல் அமைந்துள்ள காவேரி துலா கட்டடம் பகுதியில் பிரதி ஆண்டும் மாசி மாதம் நடைபெறும் துலா உற்சவம் நிகழ்விற்கு இந்நகராட்சி மூலம் பொது சுகாதரா வசதி, தற்காலிக கழிவறை வசதி மற்றும் குடிநீர் வசதி செய்யப்பட்டு வருகின்றன. அதே போன்று இந்த 2023 ஆம் ஆண்டு நிகழ்வின் போதும் பக்தர்கள் மற்றும் பொது மக்கள் பயனுக்காக சுகாதார வசதி தவிர குடிநீர் வசதி மற்றும் தீர்த்தவாரி வசதிக்காக தற்காலிக முறையில் பொது உபபோக நீர் வசதி மேற்கொள்ள ஏற்கனவே உள்ள ஆழ்துளை கிணறு மற்றும் Starter பழுதுகளை உடன் சீரமைக்கவும், காவேரியில் நீர்வரத்து இல்லாத காரணத்தினால் தீர்த்தவாரி நிகழ்வானது எவ்வித தடைதயுமின்றி நடைபெற தற்காலிக முறையில் குழாய்கள் அமைத்து தீர்த்தவாரி நிகழ்வினை நடைபெற வேண்டிய நிலை கருதியும் செலிவீனத்திற்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டும் ஒப்பந்தப்புள்ளி பிரேரணைகள் தொடர காலதாமதம் ஏற்படும் நிலை கருதியும் இப்பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகர்புற நகராட்சிகள் சட்டம் 2023 விதி 235 –ன் கீழ் ரூ.1,89,000/- செலவினத்தில் இந்நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு. A. சட்டையப்பன் அவர்களுக்கு ஒப்படைப்பு பணியாக வேலை உத்தரவு வழங்கப்பட்டதின் படி பணி மேற்கொள்ளப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : 1. மன்றம் பதிவு செய்யலாம்.**

**ந.க.எண்.** 010112 /2023/இ1

**மன்றத்தீர்மானம் எண். 789, நாள்.29.08.2024**

**அலுவலக குறிப்பு: பதிவு செய்யப்பட்டது**

9) இந்நகராட்சி மூலம் பராமரிக்கப்பட்டு வரும் பாதாள சாக்கடை திட்ட கழிவு நீர் சேகரிப்பு முறையில் திடக்கழிவுகளால் கழிவு நீர் சேகரிப்பு குழாய் மற்றும் ஆய்வுக் குழிகளில் ஏற்பட்டு வரும் கழிவு நீர் கசிவின் முற்றிலும் தவிக்க உரிய சாதனங்கள் மூலம் அடைப்புகள் நீக்கும் வரை முற்றிலும் தற்காலிகமாக இந்நகராட்சியில் உள்ள ஒரு எண் கழி நீர் உறிஞ்சும் வாகனம் தவிர கூடுதலாக 3000 லிட்டர் கொள்ளளவு கொண்ட தனியார் செப்டிக் டேங் கிளினிக் வாகனம் மூலம் கடந்த பிப்ரவரி 2024 முதல் ஏப்ரல் 2024 வரை பராமரிப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்நிலையில் தற்போது பாராளுமன்ற உறுப்பினர் தேர்தல் 2024 –ன் தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமுலுக்கு வரப் பெற்றுள்ளதால் நிர்வாக அனுமதி ஒப்பந்தப்புள்ளி பிரேரணைகளை பேண இயலாததால் இவ்வலுவலக வேலை உத்தரவு பெற்று ந.க.எண்.204/24/இ/நாள்.01.02.2024 ன்படி M/S வெற்றிவிநாயகா செப்டிக் டேங் கிளினிக் வாகனம் மூலம் பணிகள் நடைபெற வழங்கப்பட்ட வேலை உத்தரவின்படி அனுமதிக்கப்பட்ட அதே மதிப்பீடு விலை விகிதம் மற்றும் விலைப்புள்ளி ஏற்பு தொகையின் அடிப்படையில் எதிர்வரும் மே 2024 முதல் ஜீன் 2024 மற்றும் ஏப்ரம் 2024 பின்பகுதி ஆறு நாட்கள் ஆக மொத்தம் 120 நாட்கள் பணிகள் நடைபெற தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் சட்டம் 2023 விதி எண் 235 பிரி 3-ன் கீழ் நீட்டிக்கப்பட்ட வேலை உத்தரவின்படி பணிகள் மேற்கொள்ளப்பட்டமைக்கும், அதற்கான செலவினம் ரூ.5,28,000/- ஏற்பட்டுள்ளதையும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : 1. மன்றம் பதிவு செய்யலாம்.**

**ந.க.எண்.** /2023/இ1

**மன்றத்தீர்மானம் எண். 790, நாள்.29.08.2024**

**அலுவலக குறிப்பு: பதிவு செய்யப்பட்டது**

10) இந்நகராட்சி பாதாள சாக்கடை திட்ட இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணியில் பிரதான கழிவு நீரேற்று நிலையம் VIII-ல் உள்ள 50HP, தரங்கம்பாடி சாலை Lighting Station -ல் உள்ள 50HP தரங்கம்பாடி சாலை Lighting Station -ல் உள்ள 10 HP மற்றும் கல்லனை சாலை Lifting Station -ல் உள்ள 4 HP ஆகிய நான்கு NON Clog Submerisible Motor Pump sets திடக்கழிவு மற்றும் மின்னழுத்த வேறுபாடு காரணமாக கூடுதல் வெப்பநிலை அடைந்து மோட்டார் வைண்டிங் மற்றும் Mechanical Seal. Bearing and Lock Arrangements பழுதடைந்து இயக்க இயலாத நிலை உள்ளன. இந்த பழுதான மோட்டார் பம்ப்கள் உள்ள கழிவு நீரேற்று நிலையங்களில் Stand by motor pump இல்லாத நிலையில் உடன் பழுது நீக்கம் செய்ய வேண்டிய நிலை உள்ளன. கழிவு நீரேற்றத்திற்காக சிறப்பாக கழிவு நீர் உட்புகாமல் Mecahnical Seal. Impallor Lock Seal. Monitor Electrode, Coolent oil மற்றும் Thermisors for Thermal Protection ஆகிய பாதுகாப்பு உபகரணங்களுடன் பழுது நீக்கம் செய்ய வேண்டியுள்ளதால் உள்ளூர் பணிமனைகளில் பழுது நீக்கம் செய்ய இயலாது, உள்ளூர் விலைப்புள்ளி கோரினாலும் உதிரி பாகங்கள் தயாரிப்பு நிறுவன சர்வீஸ் முகவரிடம் உதிரிப்பாகங்கள் பெற்று, உரிய முறையில் பொருத்தம் செய்யப்பட்டால் மட்டுமே நீண்ட கால பயனளிக்கும் வகையில் செய்து வழங்க இயலும். இந்நிலையால் காலதாமதம் ஏற்படுவதோடு, உரிய தொழில்நுட்ப அடிப்படையில் உள்ளூர் பணிமனைகளில் பழுது நீக்கம் செய்ய இயலாது. மேற்கண்ட நிலைகளின்படி, பழுதான ஒரு எண். 50 HP ஒரு எண்.30 HP ஒரு எண்.10HP மற்றும் ஒரு எண்.4HP Non Clog Submerisable Motor Pump Set -களை உரிய முறையில் பழுது நீக்கம் செய்ய இந்த மோட்டார் பம்பின் உற்பத்தி நிறுவனமான M/S AISH TECHNOLOGIES PRIVATE LIMITED CHENNAI அவர்களின் மூலமாக பழுது நீக்கும் பணிகளை மதிப்பீடு விலை விகிதத்திற்கே ஒப்படைப்பு பணியாக தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் சட்டம் 2023- விதி எண்.235 பிரிவு 3-ன் கீழ் நிர்வாக அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ளப்பட்டதையும், பணிகள் மேற்கொள்ளப்பட்டமைக்கு ரூ.14,32,000/- பில் பட்டியல் தொகை வழங்கப்பட்டமையையும், மன்றத்தின் பதிவிற்கும் பார்வைக்கும் வைக்கப்படுகின்றன.

**அலுவலக குறிப்பு : 1. மன்றம் பதிவு செய்யலாம்.**

**ந.க.எண். /2023/இ1**

**மன்றத்தீர்மானம் எண். 791, நாள்.29.08.2024**

**அலுவலக குறிப்பு: பதிவு செய்யப்பட்டது**

11) மயிலாடுதுறை நகராட்சி பொறியியல் பிரிவு பராமரிப்பில் உள்ள நகராட்சி ஆணையர் பயன்பாட்டிற்காக புதியதாக கொள்முதல் செய்யப்பட்ட **TN-82-L-5470** எண்ணுள்ள **Bolero** வாகனம் கொள்முதல் செய்யப்பட்டு 48000 கி.மீ மேல் இயக்கப்பட்டுள்ளதால் இதனை நான்காம் பராமரிப்பிற்கு அனுப்பப்பட்டதில் **Bolero** நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற நிறுவனமான **Shiva Auto Mobiles(P)Ltd, Kumbakonam.** நிறுவனத்திடமிருந்து பட்டியல் தொகை ரூ.24,953/— செலுத்திடக் கோரப்பட்டுள்ளது. எனவே இச்செலவீனத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்படி நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2.மேற்படி வாகன பயன்பாட்டின் அவசியம் கருதி செலவீனத் தொகை ரூ.24,953/—ஐ நேரடியாக **Shiva Auto Mobiles(P)Ltd, Kumbakonam.** நிறுவனத்திற்கு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண்.0807—1/2024/இ1**

**மன்றத்தீர்மானம் எண். 792, நாள்.29.08.2024**

**அலுவலக குறிப்பு: அலுவலகக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது**

12) மயிலாடுதுறை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கட்டிட/திட்ட அனுமதி கோரி பெறப்படும் விண்ணப்பங்களுக்கு கட்டிட உரிமையாளரின் சுயசான்றின் அடிப்படையில் 2500 சதுர அடி வரை பரப்பளவுள்ள மனையில் 3500 சதுர அடி வரையிலான தரைத்தளம் (அ) தரைத்தளத்தடன் கூடிய முதல் தளம் குடியிருப்புக் கட்டிடங்கள் (இரு குடியிருப்புகள் மட்டும்) கட்ட இணையவழி (Single Window Portal) கட்டிட அனுமதி வழங்குவதற்கு செலுத்தவேண்டிய ஒருங்கிணைந்த கட்டணங்களை நிர்ணயம் செய்து வரப்பெற்ற அரசாணை (நிலை) எண்.94, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.1) துறை நாள்.18.07.2024 மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

(அ) மன்றம் பதிவு செய்யலாம்.

(ஆ) அரசாணையில் தெரிவிக்கப்பட்ட வழிமுறைகள் மற்றும் விதிமுறைகளுக்கு மாறாக கட்டப்படும் கட்டிடங்களுக்கு தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998 மற்றும் தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி விதிகள் 2023 கீழ் உரிய நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

(இ) இது குறித்து பொதுமக்கள் அறியும் வண்ணம் முக்கிய இடங்களில் விளம்பரப்பலகைகள் அமைக்கவும் , அதற்கான செலவீனத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்**: 2972/2024/எப்1

**மன்றத்தீர்மானம் எண். 793, நாள்.29.08.2024**

**அலுவலக குறிப்பு: அலுவலகக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது**

13) மயிலாடுதுறை நகராட்சி குடிநீர் வழங்கல் பணிக்கு கொள்ளிடம் ஆற்று நீர் ஆதாரம் முடிகண்டநல்லூர் கிராமத்தில் அமைக்கபட்டுள்ள தலைமை பணியிடத்திலிருந்து பெறப்பட்டு 120 HP வெர்டிகல் டர்பைன் பம்ப் மூலம் நகர்புறத்தில் உள்ள ஐந்து OHT –களுக்கு நீரேற்றம் நடைபெறுகிறது. இப்பணியின் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளுக்கு உரிய தொழில் நுட்ப பணியாளர்கள் மற்றும் நிரந்தர பணியாளர்களின்றி OHT –களின் வால்வு இயக்கம் மற்றும் குடிநீர் தலைமை பணியிடத்தில் மோட்டார் பம்ப் இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகளில் சுணக்கம் ஏற்படுகின்றன.

தமிழக நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்: ms 112 நாள்: 17.08.2022-ன் விதிமுறைகள்படி, குடிநீர் வழங்கல் பணிக்கு போதிய பணியாளர்கள் இல்லாத நிலைக்கு Private Service Provider/Contractor/Agency to operate and maintain the UGss on contract Basis for the period of Three years –க்கு இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளுக்கு வழிவகை செய்யப்பட்டுள்ளன. மேலும், இந்த அரசாணையில் TWAD, PWD and Collectorate ஊதிய பட்டியலில் ஏது குறைவோ அதன் அடிப்படையில் மதிப்பீடு தயார் செய்யப்பட வேண்டும் எனவும் நெறிமுறைகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்நகராட்சி குடிநீர் வழங்கல் பணி பணியில் கழிவு நீரேற்று நிலையங்கள் கழிவு நீர் உந்து நிலையங்கள் மற்றும் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களில் O&M பணிக்கு போதிய அளவில் இல்லாத நிலை கருதி நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.21787/2021/EA2 நாள்:02.10.2021-ன் அளவுகோல் படி, பணியாளர்களை கணக்கீடு

செய்யப்பட்டதில் மின்பணியாளர் 3 நபர்கள், பராமரிப்பு உதவியாளர்கள் 20 நபர்களும், வாகன ஓட்டுநர் ஒருவரும், வாகன இயக்க துலக்குநர் ஒருவரும் ஆக மொத்தம் 25 பணியாளர்கள் மூலம் பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளன. எனவே, தற்போதைய அரசாணையின்படி குடிநீர் வழங்கல் பணியினை 25 பணியாளர்களை கொண்டு Private Service Provider/Contractor/Agency to operate and maintain the water supply on contract Basis for the period of Three years –க்கு பெறப்படும் வரை குறுகிய காலத்திற்கு எதிர்வரும் August 2024 மற்றும்

September 2024 ஆகிய இரண்டு மாத காலத்திற்கு மட்டும் உரிய Skilled/Unskilled/Semi skilled பணியாளர்கள் 25 நபர்கள் வழங்கி பணிகள் மேற்கொள்ள அனுமதியும், இப்பணிக்கான மதிப்பீடு செலவீனம் ரூ.9,75,000/- க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம்.**

**2. இப்பணிக்கான செலவினத்தினை 2024 – 2025 - ஆம் நிதியாண்டு குடிநீர் திட்ட வரவு செலவு பட்டியலில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண். 5087 /2024/இ1**

**மன்றத்தீர்மானம் எண்.794, நாள்.29.08.2024**

**அலுவலக குறிப்பு: அலுவலகக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது**

**14)** நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் மயிலாடுதுறை, அவர்களின் உத்தரவு ந.க.எண்.678/2024/டிசிபி, நாள்.26.06.2024 மற்றும் நாள்.01.07.2024 –ன்படி வார்டு எண்–4, பிளாக் எண்–16, சர்வே எண்கள்–764/4, 764/5, 764/9 மற்றும் 764/11 இல் 3699 சதுரமீட்டர் பரப்பளவில் அமையும் 14 மனைகளை கொண்ட குடியிருப்பு மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப அனுமதி மற்றும் வரைபட ஒப்புதல் எண்.SWP/L.P/DTCP/Ma.Ma No.18/2024 இன்படி ஒப்புதல் அளித்து உத்தரவிடப்பட்டுள்ளது. மேற்கண்ட மனைப்பிரிவில் சாலை 393.35 சதுர மீட்டர், மற்றும் நகராட்சிக்கு பொது உபயோக இடம் 16.71 சதுர மீட்டர் மற்றும் மின் வாரிய பொது உபயோக இடம் 16.54 ச.மீட்டர் ஆகியவை தானபத்திரம் மூலம் மயிலாடுதுறை எண்1 இணை சார்பதிவாளர் அலுவலக ஆவண எண். 1469/2024 நாள்:27.06.2024 இன்படி மனைப்பிரிவு உரிமையாளர்திரு.V.சங்கரன் என்பவரால் மயிலாடுதுறை நகராட்சி ஆணையருக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

மேலும் மனைப்பிரிவு அனுமதிக்கான பின்வரும் விவரப்படி கட்டணங்கள் மனைப்பிரிவு உரிமையாளரால் நகராட்சியில் செலுத்தப்பட்டது.

| வ.எண் | கட்டணங்கள் விபரம் | கட்டணம் ரூ | செலுத்துச்சீட்டு எண் மற்றும் நாள் |
|---|---|---|---|
| 1 | மனைப்பிரிவு வளர்ச்சி கட்டணம் | 5000 | 097/001/1/24–25/001161<br>நாள் : 23.07.2024 |
| 2 | சாலை மற்றும் அடிப்படை வசதிகள் பராமரித்தல் கட்டணம் | 1,00,000 | 097/001/1/24–25/0011160<br>நாள் : 23.07.2024 |
| 3 | மின் விளக்கு கம்பங்கள் அமைத்தல் மின் வாரியத்திற்கு செலுத்தப்பட்டது | 81720 | PGNIOB656089078<br>நாள் : 07.03.2024 |
| 4 | மழைநீர் வடிகால் அமைத்தல் நகராட்சிக்கு செலுத்தப்பட்ட மதிப்பீட்டு கட்டணம் | 215600 | 097/001/01/24–25/0011162<br>நாள் : 23.07.2024 |
| 5 | மின் விளக்கு அமைத்தல் நகராட்சிக்கு செலுத்தப்பட்ட கட்டணம் | 21600 | 097/001/1/24–25/0011159<br>நாள் : 23.07.2024 |

மேலும் சாலை மற்றும் பொதுப்பயன்பாட்டு இடம் நகராட்சி ஆணையர் பெயரில் நில அளவை ஆவணங்களில் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது, மனைப்பிரிவில் அடிப்படை வசதிகளான பாதாள சாக்கடை குழாய், குடிநீர் குழாய் மற்றும் தார் சாலை போடப்பட்டுள்ளது என நகராட்சி பொறியாளர் சான்று அளித்துள்ளார். அனைத்து மனைகளுக்கும் நகராட்சியால் காலி மனை வரி விதிப்பு செய்யப்பட்டுள்ளது. உயர் அழுத்த மின்கம்பி பாதை மாற்றியமைக்க மின் வாரியத்திற்கு கட்டணம்

செலுத்தப்பட்டுள்ளது. எனவே மேற்படி மனைப்பிரிவிற்கு நகராட்சியால் இறுதி ஒப்புதல் அளித்து உரிய உத்தரவு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண்.**2567 / 2024/எப்1.

**மன்றத்தீர்மானம் எண்.795, நாள்.29.08.2024**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது**

15) மயிலாடுதுறை நகராட்சி 36 வார்டுகளை கொண்ட சிறப்பு நிலை நகராட்சி ஆகும். நகராட்சியின் திட்ட பணிகளுக்கு தேவையான விரிவான திட்ட அறிக்கை மற்றும் டிசைன், முகப்பமைப்பு, மண் பரிசோதனை மண் தாங்கும் திறன் உட்பட்ட பணிகளை உடனடியாக தேவைக்கு தகுந்தாற்போல் அவ்வப்போது அறிக்கையாக சமர்ப்பிக்க வேண்டியுள்ளது. மேலும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலக திறப்பு விழா 04.03.2024 அன்று, நடைப்பெற்றதில் மயிலாடுதுறை நகராட்சிக்கு புதிதாக அலுவலகம் கட்டடம் ரூ.10.00 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும் என அறிவித்தார். இந்நிலையில், மயிலாடுதுறை நகராட்சிக்குட்பட்ட காமராஜர் பழைய பேருந்து நிலையத்தினை சீரமைத்திடவும், பூம்புகார் சாலையில் வணிக வளாகம், பார்க் அவன்யு சாலையில் வணிக வளாகம், பெரிய கடைத்தெரு சாலையில் திரு.வி.க. தினசரி காய்கறி மார்கட் மேம்படுத்தல், மற்றும் காந்திஜி சாலையில் உள்ள பழனிச்சாமி அங்காடி வணிக வளாகம் கட்டடம் கட்டுதல் போன்ற பணிகளுக்கு விரிவான திட்ட அறிக்கை மற்றும் வரைபடங்கள், மதிப்பீடு, மண் பரிசோதனை ஆய்வறிக்கை, தல ஆய்வு செய்து நகராட்சிக்கு புத்தக கட்டு வடிவில் வழங்கிட திட்ட ஆலோசகர் ஒருவரை விலைப்புள்ளி கோரி தேர்வு செய்திடவும், மேற்குண்டான செலவுத் தொகையாக தோரயமாக பணியின் மதிப்பீடு 0.95 சதவீதம் வழங்க அனுமதியும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண். /2024/இ1**

**மன்றத்தீர்மானம் எண்.796, நாள்.29.08.2024**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது**

16) மயிலாடுதுறை நகராட்சி பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள சிறு மின் விசை பம்புகளை பராமரித்தல் மற்றும் அவ்வபோது ஏற்படும் பழுதுகளை உடன் நீக்கி செயல்பாட்டிற்கு கொண்டு வருவது அவசர அவசியமாக உள்ளது. எனவே, 2024-2025 ஆண்டிற்கான சிறுமின்விசை பம்புகள் பழுது நீக்கம் செய்யும் பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.9.90 இலட்சம் ஆகும். இச்செலவீனத்தை இந்நகராட்சி குடிநீர் திட்ட நிதியில் மேற்கொள்ளவும், மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண். /2024/இ1**

**மன்றத்தீர்மானம் எண்.797, நாள்.29.08.2024**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது**

17) இந்நகராட்சி குடிநீர் வழங்கல் பணியில் தினசரி 7.78 mld குடிநீர் நடைபெறுகின்றன. பொது மக்களின் குடிநீர் உபயோகத்திற்காக வழங்கப்படும் குடிநீர் விநியோக பணியில் நோய் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைக்காக Surface Water குடிநீர் சுத்திகரிப்பு இல்லாத இடங்களில் ஆற்று நீர் ஆதாரத்தை கொண்டு வழங்கப்படும் குடிநீர் விநியோகத்திற்கு 0.2 PPm குளோரின்

Content இருக்கப்பெற, திட நிலையில் உள்ள குளோரின் உரிய முறையில் குடிநீருடன் Content இல்லாது பாதுகாப்பற்ற நிலையில் குடிநீர் விநியோகம் நடைபெறுவதை தவிர்க்க, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய தற்போதைய நெறிமுறைப்படி திரவ நிலையில் உள்ள Sodium hypo Solution மூலம் நீரினை சுத்திகரிப்பு செய்ய 4% -6% Chlorine Content கிடைக்கப் பெறும் வகையில் IS குறியீடு 11673 தரக்குறியீட்டுடன் கூடிய Solution Hypo Solution (4% -6%) ஒரு லிட்டர் 18.50 வீதம் மற்றும் 15% GST வரி செலவினக்கடன் 45,500 லிட்டர் Sodium Hypo Chloride Solution வாங்குவதற்கும், அதற்கான மதிப்பீடு செலவினம் ரூ.9,90,000/- மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1) **மன்றம் அனுமதிக்கலாம்.**

2) **இப்பணிக்கான செலவினத்தின் 2024-2025 –ன் நிதியாண்டு வரவு செலவு பட்டியலில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண். /2024/இ1**

**மன்றத்தீர்மானம் எண். 798, நாள்.29.08.2024**

**அலுவலக குறிப்பு: அலுவலகக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

18) மயிலாடுதுறை நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்காக பொருத்தப்பட்டுள்ள ஜெனரேட்டர் (50 KVA)-இல் 2 மின்கலப்பெட்டியும் பழுதாகி உள்ளதால் ஜெனரேட்டர் இயக்க முடியாத சூழ்நிலையில் உள்ளது. மேலும், அலுவலக பயன்பாட்டிற்கு சிரமமாக உள்ளதை தொடர்ந்து, புதிதாக 2 மின் கலப்பெட்டி Battery 12v-1000A –வாங்கிட அனுமதியும், செலவினத் தொகை ரூ.16,000/- க்கு அனுமதியும் ஒப்புதலுக்கு பணிந்து சமர்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண். /2024/இ1**

**மன்றத்தீர்மானம் எண். 799, நாள்.29.08.2024**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது**

19) மயிலாடுதுறை நகராட்சி UGSS திட்ட O&M பணியில் தினசரி 5.50 MLD அளவுக்கு கழிவு நீர் சேகரிகப்பட்டு STP நிலையித்திற்கு கழிவு நீரேற்று நடைபெறுகிறது. இந்நகராட்சியின் UGSS திட்ட STP நிலையத்தில் Waste Stablization Pond முறையில் சுத்திகரிக்கப்பட்டு ஆறுபாதி கிராமத்தில் சத்தியவான் வாய்க்காலில் வெளியேற்றப்படுகிறது.

தற்போதைய அரசு விதிமுறைகளின் படி இந்தியா திரு நாட்டிலுள்ள அனைத்து நகர்புற உள்ளாட்சிகளிலும் கையாளப்பட்டு வருகிற UGSS திட்ட கழிவு நீர் சேகரிப்பு முறையின் கழிவுநீரின் தன்மை, வேதியியல், உயிரியல் கூறுகள், பொது மக்களுக்கும், விலங்கினங்களுக்கும் மற்றும் நிலத்தடி நீர்மட்டத்திற்கு பங்கம் ஏற்படா வண்ணம் கண்காணிக்க Online Contineous Effulency Monitering System முறையினை அமல்படுத்தி பெரும்பாலான நகர்புற உள்ளாட்சி அமைப்புகளில் Online Contineous Effluent Monitoring System Device அமைத்து மத்திய மற்றும் மாநில அரசுகளால் தீவிரமாக கண்காணிக்கப்படுகின்றன.

இந்நிலைக்கு இந்நகராட்சியின் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் அரசு சிறப்பு திட்ட நிதியால் OCEMS Device Flow Meter –ஐ சுத்திகரிப்பு நிலையத்தின் inlet & Out let–ல் பொருத்தும் பணிக்கும் இப்பணிக்கான மதிப்பீடு செலவினம் ரூ.6.00 இலட்சம் செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :

1. **மன்றம் அனுமதிக்கலாம்.**
2. **இப்பணிக்கான செலவினத்தின் 2024-2025 –ன் நிதியாண்டு UGSS வருவாய் நிதி வரவு செலவு பட்டியலில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.**
3. இந்த பணிக்காக MIS RLT நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கப்பட்ட தொகையில் இப்பணியும் உள்ளடக்கமாக உள்ளதால் இந்த செலவினத்தினை பிடித்தம் செய்து மீத தொகையினை மட்டும் வழங்க மன்றம் அனுமதிக்காக.

**ந.க.எண்**. /2024/**இ**1

**மன்றத்தீர்மானம் எண். 800, நாள்.29.08.2024**

**அலுவலக குறிப்பு: அலுவலகக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

20) இந்நகராட்சி பாதாள சாக்கடை திட்ட இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணியில் கழிவு நீர் சேகரிப்பு முறை 88.70 கி.மீ தூரம் அமைக்கப்பட்டு அதில் 3425 எண்கள் ஆய்வுக்குழிகள் உள்ளன. இந்த ஆய்வுக்குழிகள் 30% க்கு மேலாக நெடுஞ்சாலை துறை பிரதான சாலைகளில் உள்ளன. இந்நகர் பகுதியின் Sub soil மணல் பாங்கான நிலையில் உள்ளதால் இந்நகரின் தென் கிழக்கு பகுதியில் Oil and Natural Gas நிறுவனத்திலிருந்து 60 டன் எடைக்கு மேலாக வந்து செல்லக் கூடிய மிகுதியான எடையுடைய போக்குவரத்து அதிர்வுகளால் ஆய்வுக்குழி பிரேம் மற்றும் மூடிகள் பழுதாகி வருகின்றன. மேலும் நகரின் Secondary தெருக்களில் உள்ள குடியிருப்புகளுக்கு கட்டுமான பணிக்காக மிகுந்த எடையுடன் கட்டுமான பொருட்கள் எடுத்து செல்லும் போக்குவரத்துகளால் உட்புறமும் ஆய்வுக்குழி மூடிகள் பழுது ஏற்பட்டு வருகின்றன. அவ்வப்போது ஏற்படும் ஆபத்தான நிலையில் உள்ள ஆய்வுக்குழிகளின் பிரேம் மற்றும் மூடிகள் 80% க்கு மேல் சீர் செய்யப்பட்டுள்ளன. மீதமுள்ள 20% ஆய்வுக்குழிகள் சாலை மட்டத்திற்கு கீழே உள்ளதால் குறைபாடுகளை கண்டறிய மிகுந்த சிரமான நிலை உள்ளதோடு, புதிதாக அமைக்கப்பட்ட தார் சாலைகளும் சேதமடைகின்றன. இக்குறைப்பாட்டை தவிர்க்க இந்நகராட்சியின் நிதிநிலை குறைவு கருதி 125 எண்கள் FRB Manhole Frame and Cover Set புதிதாக சப்ளை செய்து தற்போதைய சாலை மட்டத்திற்கு அமைத்திடும் பணிக்கும், இப்பணிக்கான மதிப்பீடு செலவினம் ரூ.9,90,000/-க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** : 1. **மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண்**. /2024/**இ**1

**மன்றத்தீர்மானம் எண். 801, நாள்.29.08.2024**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது**

21) மயிலாடுதுறை நகராட்சியில் உள்ள அனைத்து வார்டுகளிலும் உள்ள சேதமடைந்த ஆள் இறங்கும் தொட்டியின் Frame மற்றும் மூடிகளை தரமானதாக மாற்றிட தேவையான Frame மற்றும் மூடிகளை தருவித்தல் மற்றும் ஒப்படைத்தல் பணிக்கு மதிப்பீட்டு தொகை ரூ.9.90 இலட்சம் ஆகும். இச்செலவீனத்தை இந்நகராட்சி குடிநீர் திட்ட திதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்**. /2024/**இ**1

**மன்றத்தீர்மானம் எண். 802, நாள்.29.08.2024**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது**

22) இந்நகராட்சி குடிநீர் வழங்கல் பணியில் முடிகண்டநல்லூர் குடிநீர் தலைமை பணியிடத்தில் குழாய் பொருத்துநரின் கோரியுள்ளதற்கிணங்க மேற்கண்ட இடங்களில் 20.06.2024 அன்று குழாய் பொருத்துநர், குழாய் ஆய்வாளர், நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையாளர் ஆகியோருடன் சேர்ந்து, ஆய்வின்போது பொறியாளர் அவர்களின் அறிவுரைகள் தல ஆய்வின் போது வழங்கப்பட்டதற்கிணங்க பணியின் அவசர அவசியம் கருதி, பணியினை உடனடியாக செய்து முடிக்க வேண்டியுள்ளது. மேலும், Gate Valve. Sluice Valve தொட்டி சிதலமடைந்தும், சாலை மட்டத்திலிருந்து மிகவும் தாழ்வாக உள்ளபடியாலும், குடிநீர் சசிவு உள்ளபடியாலும் புதிதாக தொட்டி கட்ட வேண்டியது அவசியமாகிறது. சாலை விரிவாக்கத்தினை தொடர்ந்து, சாலையின் குறுக்காக அமைந்துள்ள தொட்டிகளை சாலையின் புருவ பகுதியில் அமைத்திட வேண்டியும் உள்ளது. போக்குவரத்துக்கும் இடையூறின்றியும், மாற்றி அமைக்க வேண்டியதன் முக்கியத்துவத்தினை கருதி, சம்மந்தப்பட்ட இதர துறைகளுக்கு பணி செய்து குறித்து தெரிவித்து கடிதம் வைத்து பணிகளை மேற்கொள்ள அனுமதியும், அதற்கான உத்தேச செலவினத் தொகையாக ரூ.9.80 இலட்சத்திற்கு அனுமதி ஒப்புதலுக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவீனத்தை இந்நகராட்சி குடிநீர் திட்ட நிதியில் மேற்கொள்ள மற்றும் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்**. /2024/இ1

**மன்றத்தீர்மானம் எண். 803, நாள்.29.08.2024**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது**

23) இந்நகராட்சி குடிநீர் வழங்கல் பணியில் முடிகண்டநல்லூர் குடிநீர் தலைமை பணியிடத்திலிருந்து இந்நகராட்சி பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யும் பணியில் அமைக்கப்பட்டுள்ள குடிநீர் பிரதான குழாய்களில் ஆங்காங்கே ஏற்பட்டுள்ள உடைப்புகளை ,உடன் சீரமைத்து குடிநீர் விநியோகம் சீரான முறையில் நடைபெற தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.8.70 இலட்சம் ஆகும். இச்செலவீனத்தை இந்நகராட்சி குடிநீர் திட்ட திதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்**. /2024/இ1

**மன்றத்தீர்மானம் எண். 804, நாள்.29.08.2024**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது**

**24) மயிலாடுதுறை நகராட்சி பொறியியல் பிரிவு பராமரிப்பில் உள்ள TN-51C-3108 எண்ணுள்ள Sullage Lorry தகுதி சான்று பெறத்தக்க வகையில் கீழ்கண்ட விவரப்படியான செலவினங்களை ரொக்கமாக செலுத்தி பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.**

| | | |
|---|---|---|
| 1. | FC Face Smoke Certificate and Green tax | 1300.00 |
| 2. | Sticker Fees | 4000.00 |
| 3. | Speed metre Controler Renewal | 2500.00 |
| | | 7800.00 |

மேற்காணும், செலவீனத் தொகை ரூ.7800,00/-க்கான அவ்வாகனத்தின் ஓட்டுநர் திரு.N. பழனிவேலு அவர்கள் ரொக்கமாக செலுத்தியுள்ளதால் மேற்காணும் செலவீன தொகைகளை அன்னாருக்கு திரும்ப வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.** /2024/இ1

**மன்றத்தீர்மானம் எண். 805, நாள்.29.08.2024**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது**

25) மயிலாடுதுறைக்கு சொந்தமான நகராட்சிக்குட்பட்ட மேட்டுத் தெருவில் உள்ள இந்நகராட்சியில் இரு சக்கர வாகனம் நிறுத்துமிடத்தில் அமைக்கப்பட்டுள்ள சுற்றுசுவர் சேதமடைந்துள்ளதை சீர் செய்யும் பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.1,85,000/- ஆகும். இந்செலவீனத்தை இந்நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.** /2024/இ1

**மன்றத்தீர்மானம் எண். 806, நாள்.29.08.2024**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது**

26) இந்நகராட்சியில் நகர்ப்புற உள்ளாட்சி கட்டமைப்புப்படி தேர்வு செய்யப்பட்ட நகரமன்ற தலைவர் மற்றும் உறுப்பினர்களின் கூட்டமவுர்க்காக உள்ள மன்ற வளாகத்தில் நகர்மன்ற தலைவர் இருக்கைக்கான மேடை அமர்வு, நாற்காலி மற்றும் மேஜைகள் பழுதடைந்த நிலையில் உள்ளன. மேலும், ஆணையாளர் அமர்வுக்குரிய இருக்கை வசதிகள் மற்றும் பார்வையாளர்கள், ஊடக நிருபர்களுக்கான இருக்கை வசதிகள் போதிய அளவில் இல்லாத நிலையில் உள்ளன. மன்ற வளாகத்தின் மாண்பு கருதி நகர்மன்ற தலைவர் அவர்களுக்கு புதிய இருக்கை வசதி மற்றும் ஆணையாளர் அவர்களுக்கும், ஊடக நிருபர்கள் பார்வையாளர்களுக்கான இருக்கை வசதிகளுக்கு நாற்காலி மற்றும் மேஜைகள் புதிதாக வாங்கும் பணிக்கும் இப்பணிக்கான மதிப்பீடு செலவினம் ரு.3,00.000/- க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இப்பணிக்கான செலவிணத்தின் 2024-25 நிதியாண்டு பொது நிதி வரவு செலவு திருத்திய பட்டியலில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்..

**ந.க.எண்.** /2024/இ1

**மன்றத்தீர்மானம் எண். 807, நாள்.29.08.2024**

**அலுவலக குறிப்பு: அலுவலகக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

27) மயிலாடுதுறை நகராட்சி மூலம், பராமரிக்கப்பட்டு வரும் பாதாள சாக்கடை திட்ட இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிக்கு அரசின் விதிமுறைப்படி நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் நிர்வாக அனுமதி பெறப்படும், வரை பணியின் அவசியம் கருதி டிசம்பர் 2023 மாதத்திலிருந்து மாவட்ட ஆட்சித்தலைவர், மயிலாடுதுறை மாவட்டம் அவர்களின் ஊதிய பட்டியல் அடிப்படையில் பணியாளர்களை வெளிமுகமை ஒப்பந்த வழங்கி பணிகள் நடைபெறுகிறது.

இப்பணியில் 8 கழிவு நீரேற்று நிலையம், 7 கழிவு நீர் ஊந்து நிலையம், 3 தற்காலிக கழிவு நீர் உந்து நிலையம் ஆகிய இடங்களில் அவ்வபோது பழுது ஏறபடும் பழுதடைந்த மோட்டார் பம்புகளை பிரித்து திரும்ப பொருத்தும் பணி, ஆய்வுக் குழிகளில் மிகுதியாக கழிவு நீர் கசிவுகள் ஏற்படும் போதும், மின் மோட்டார் பம்புகளின் உதிரிப்பாகங்களில் பழுது ஏற்படும்போது உதிரிபாகங்கள் மாற்ற வேண்டியது போன்றவை மேற்கொள்ளப்பட வேண்டும். தற்போது, பாதாள சாக்கடை

இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகள் மதிப்பீட்டில் வழங்கப்பட்டுள்ளது. எனவே, பணியாளர்கள் மட்டுமே வழங்கிட வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. எனவே, கூடுதல் பணிகளை மேற்கொள்ளவும், இப்பணிக்கான மதிப்பீடு செலவினம் ரூ.9.90 இலட்சம் செலவிணத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டி ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இப்பணிக்கான செவிணத்திற்கு 2023 – 2024 நிதியாண்டு பாதாள சாக்கடை வரவு செலவு பட்டியலில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. பணியின் அவசிய அவசரம் கருதி நகர் மன்றத்தின் அனுமதியினை எதிர் நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண்**. 624/2024/இ1

**மன்றத்தீர்மானம் எண். 808, நாள்.29.08.2024**

**அலுவலக குறிப்பு: அலுவலகக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

**28)** மயிலாடுதுறை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உறவினர்களற்ற அனாதையாக கிடக்கும் சடலத்தினை அரசு மருத்துவமனை சவக்கிடங்கிலிருந்து எடுத்து சென்று நல்லடக்கம் செய்ய இந்நகராட்சி தூய்மை பணியாளர்களுக்கு ஒரு சடலத்திற்கு ரூ.200/– வீதம் வழங்க 2024–2025 ஆம் ஆண்டிற்கு உத்தேச செலவினத்தொகை ரூ.20,000/–த்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.161/2018/எச்2.**

**மன்றத்தீர்மானம் எண். 809, நாள்.29.08.2024**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது**

**29)** இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மழைக்காலங்களில் தொற்று நோய்கள் பரவாமல் தடுக்கும் பொருட்டும், சமுதாய கழிப்பறைகள் மற்றும் பொது கழிப்பறைகள் பராமரிக்கும் பொருட்டும் பொதுமக்கள் அதிகமாக கூடும் இடங்களான பேருந்து நிலையம், பூங்கா, சந்தை, கோவில்களை சுத்தமாகவும், சுகாதாரமாக பராமரிக்கும் பொருட்டு இந்நகராட்சி சுகாதாரப்பிரிவிற்கு கிருமி நாசினி தேவைப்படுகிறது. எனவே அதற்குரிய விலைப்புள்ளியானது 02.08.2024 அன்று கோரப்பட்டதில் மூன்று விலைப்புள்ளிகள் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | பொருட்களின் விபரம் | விலைப்புள்ளி விபரம் | விலை விபரம் |
|---|---|---|---|
| 1. | கிருமிநாசினி பிளிச்சிங் பவுடர் (Chlorine 33%) 15 டன்<br><br>கிருமிநாசினி நீர்த்த சுண்ணாம்பு 15 டன் | 1. Roshini prithika Agencies<br>14, Ramar Kovil street,<br>Coimbatore – 641 010 | பிளிச்சிங் பவுடர்<br>1kg Rs.43/-<br>நீர்த்த சுண்ணாம்பு<br>1kg Rs.13/- |
| | | 2. KVM Enterprises,<br>657, Thomas Street,<br>Coimbatore – 641 001 | பிளிச்சிங் பவுடர்<br>1kg Rs.40/-<br>நீர்த்த சுண்ணாம்பு<br>1kg Rs.9/- |
| | | 3. A. Kandiappan,<br>6, Poonga nagar,<br>Coimbatore – 641 201 | பிளிச்சிங் பவுடர்<br>1kg Rs.45/-<br>நீர்த்த சுண்ணாம்பு<br>1kg Rs.15/- |

மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண்.2ல் உள்ள KVM Enterprises நிறுவனத்தின் விலைப்புள்ளி குறைவாக உள்ளதால் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு** மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.**5543/2023/எச்1

**மன்றத்தீர்மானம் எண். 810, நாள்.29.08.2024**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது**

30) மயிலாடுதுறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.01 தீப்பாஞ்சம்மன் கோவில் சிமெண்ட் சாலை சிதலமடைந்து மக்கள் போக்குவரத்திற்கு மிகவும் சிரமமாக உள்ளது, மேலும், மேற்படி, சாலையின் இருபுறமும் மிகவும் தாழ்வாக உள்ளபடியால் தடுப்பு சுவர் அமைத்து இச்சாலையினை சீர் செய்ய வேண்டியது அவசியமாகிறது. எனவே, சாலையின் பாதிப்பு பகுதியினை உடைத்து தடுப்புசுவர் அமைத்து சாலையை புதுப்பிக்க வேண்டி அனுமதியும் அதற்கான உத்தேச செலவு மதிப்பீடு ரூ.4.20 இலட்சத்திற்கும் இச்செலவீனத்தை இந்நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிற.து.

**அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண். /2024/இ1**

**மன்றத்தீர்மானம் எண். 811, நாள்.29.08.2024**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது**

31) மயிலாடுதுறை **நகராட்சி வார்டு எண்**.11, **நகரளவு எண்**.795/1, **பிளாக்**.20, **வார்டுஎண்**.6, **பகுதியில் இந்நகராட்சியின் மூலம் குடிநீர் விநியோக குழாய் பதிக்க எதிர்த்து திரு. ஆர். பாண்டியன், கூறைநாடு என்பவர் சென்னை உயர்நீதி மன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு எண்**.WP.No.15265/2024-**க்கு எதிர்வாதம் இந்நகராட்சி சார்பாக சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு நடத்திட அரசால் தேர்வு செய்யப்பட்டுள்ள சிறப்பு அரசு வாதி திரு.எம்.ஹாஜகான்**, **என்பவருக்கு வழக்கறிஞர் கட்டணமாக ரூ**.25,000/- **ஐ வழங்கிட கோரி பட்டியல் வரப்பற்றுள்ளது**.

**மேற்படி**, **வழக்கறிஞர் கட்டணம் ரூ**.25,000/-**னை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கவும்**, **வழக்கு தொடர்பான நிலையின் அவசிய அவசரம் கருதி தொகை வழங்கியதை மன்றம் பின்னேற்பு செய்திடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது**.

**அலுவலக குறிப்பு :மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண். /2024/இ1**

**மன்றத்தீர்மானம் எண். 812, நாள்.29.08.2024**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது**

**32)** மயிலாடுதுறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்:**3,** பிளாக் எண் :26, நகரளவு எண்:**944/1,946**/pt ராம் நகர் சிறுவர் விளையாடும் இடத்தில் சலிம் துராணி என்பவர் ஆக்கிரமிப்பு செய்து குடியிருப்பு கட்டிடம் கட்டியது தொடர்பாக நகராட்சிக்கு எதிராக தொடரப்பட்டுள்ள சென்னை உயர்நீதிமன்ற வழக்கு எண்: CRP (NPD).No:**2296/2024** மற்றும் CMP NO:**12062/2024** வழக்கில் நகராட்சி சார்பாக வழக்கில் ஆஜராகி வழக்கு நடத்திட சென்னை உயர்நீதிமன்ற கூடுதல் அரசு வழக்கறிஞர் திரு.அருண்குமார், என்பவரின் **19.08.2024** ஆம் தேதிய கடிதத்தில் வழக்கு கட்டணம் ரூ.**30,000/–** (ரூபாய் முப்பது ஆயிரம் மட்டும்) வழங்குமாறு கோரப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட செலவின தொகை ரூ.**30,000/–** (ரூபாய் முப்பது ஆயிரம் மட்டும்) –ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**: மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்:**13919/2012/எப்1

**மன்றத்தீர்மானம் எண். 813, நாள்.29.08.2024**

**அலுவலக குறிப்பு: அனுமதிக்கப்பட்டது**

33) **13-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு. ரெத்தினவேலு அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்:-**

தனது வார்டுக்குட்பட்ட பகுயில் உள்ள கீழ்கண்ட,

1. அய்யனார் கோவில் தெரு
2. அய்யனார் கோயில் சந்து தெரு
3. வ.உ.சி. தெரு

ஆகிய தெருக்களில் உள்ள சாலைகள் குண்டும் குழியுமாக உள்ளதால் மழை காலங்களில் மழைநீர் தேங்கி விடுவதால், பொது மக்களும், மாணவ மாணவிகளும் அவ்வழியே நடந்து செல்வதில் பெரும் சிரமம் ஏற்படுவதால் அப்பகுதியில் உள்ள தெருக்களில் புதிய தார்சாலை அமைத்து தர மன்றம் தீர்மானிக்க.

**மன்றத்தீர்மானம் எண். 814, நாள்.29.08.2024**

**அலுவலக குறிப்பு: நகராட்சியின் நிதி நிலைக்கேற்ப பணிகள் மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.**

34) **33-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.இரா.நடராஜன் அவர்களால் கொண்டு வரப்பெற்ற தீர்மானம்.**

வார்டு-33 மடத்து சந்து மினி பவர் பம்பு கடந்த 4 மாதமாக இயங்கவில்லை தற்போது அதை பராமரிப்பு செய்து தர வேண்டி கடந்த 27.06.2024 நகர மன்ற கூட்டத்தில் பொருள் வைத்து நிறைவேற்றியுள்ளபடியால் அதனை தொடர்ந்து ஒப்பந்ததாரர் பணி செய்யும் போது போர் 70 அடிதாண் உள்ளது. தண்ணீர் அளவு கீழ் மட்டம் சென்று விட்டபடியால் புதிய போர் ஒன்று 200 அடியில் உடன் போட்டு தர வேண்டி மன்றம் தீர்மானிக்க

**மன்றத்தீர்மானம் எண். 815, நாள்.29.08.2024**

**அலுவலக குறிப்பு: நகராட்சியின் நிதி நிலைக்கேற்ப பணிகள் மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.**

35) **5-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.ரா.ரமேஷ் அவர்களால் கொண்டு வரப்பெற்ற தீர்மானம்.**

எனது 5-வது வார்டில் கீழ்கண்ட அடிப்படை பணிகளை செய்து தர வேண்டியுள்ளதால் மன்ற தீர்மான நிறைவேற்றி தருமாறு வேண்டுகிறேன்.

I. வள்ளலார் கோவில் கீழ வீதி தேரோடும் தெரு குண்டு குழியாக உள்ளதால் பொதுமக்கள் மற்றும் மற்றும் பள்ளி செல்லும் மாணவகள் கடும் இன்னலுக்கு ஆளாகிறார்கள் எனவே, மேற்படி வீதியிற்கு புதிய தார் ரோடு போட்டுத்த மன்ற தீர்மான நிறைவேற்றி தருமாறு வேண்டுகிறேன்.

II. வள்ளலார் கோவில் ஒத்த தெரு ரோடு பழுதடைந்துள்ளது. எனவே, புதிய தார் ரோடு போட்டுத்தர மன்ற தீர்மானம் நிறைவேற்றி தருமாறு வேண்டுகிறேன்.

III. வடக்கு ராமலிங்க தெரு தார் சாலைக்கு அடுத்துள்ள சிமென்ட் ரோடு பழுதடைந்துள்ளது. எனவே, புதிய தார் ரோடு போட்டுத்தர மன்ற தீர்மானம் நிறைவேற்றி தருமாறு வேண்டுகிறேன்.

IV. வள்ளலார் கேவில் சன்னதி தெருவில் சிமென்ட் சாலை பழுதடைந்துள்ளது வரும் பக்தர்கள் மிகுந்த சிரமத்திற்குள்ளாகிறார்கள். எனவே, புதிய சிமென்ட் ரோடு போட்டுத்தர மன்ற தீர்மானம் நிறைவேற்றி தருமாறு வேண்டுகிறேன்.

V. சேந்தகுடி துர்க்கையம்மன் கோவில் வள்ளலார் தெரு சிமென்ட் சாலை மிகவும் மோசமாக பழுதடைந்துள்ளது. எனவே, புதிய சிமென்ட் சாலை போட்டுத்தர மன்ற தீர்மானம் நிறைவேற்றி தருமாறு வேண்டுகிறேன்.

VI. புதிதாக தார் சாலை போடப்பட்ட வடக்கு ராமலிங்க தெரு, துர்க்கையம்மன் கோவில் தெரு மேற்குத் தெரு அனைத்து பாதாள சாக்கடை மேன்கோல் மூடி (**Manhole Cover**) சாலை அளவிற்கு உயர்த்திர மன்ற தீர்மானம் நிறைவேற்றி தருமாறு வேண்டுகிறேன்.

**மன்றத்தீர்மானம் எண். 816, நாள்.29.08.2024**

**அலுவலக குறிப்பு: நகராட்சியின் நிதி நிலைக்கேற்ப பணிகள் மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.**

36) **<u>18-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.ச.காந்திராஜா அவர்களால் கொண்டு வரப்பெற்ற தீர்மானம்.</u>**

I. எனது வார்டில் அரண்மனை நகர் தரமான புதிய தாஙர சாலை அமைத்து தருதல்

II. எனது வார்டில் அரண்மனை நகர் பூங்கா மேம்படுத்தும் பணிகள் அமைத்து தருதல்

III. எனது வார்டில் அனைத்து சாலைகளையும் புதிய அளவு டுத்து மனுவரையறை செய்து தரவும்

IV. தைக்கல் தெருவில் அமையும் நியாய விலைக்க கடையில் கழிப்பிட வசதி தண்ணீர் வசதி மற்றும் இதர அடிப்படை வசதி செய்து தரவும்.

V. எனது வார்டில் உள்ள புதுக்குளத்தினை மேம்பாடு செய்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

VI. எனது வார்டில் சிறு மின் விசை பம்பு ஒன்று அமைத்து தரவும்

**மன்றத்தீர்மானம் எண். 817, நாள்.29.08.2024**

**அலுவலக குறிப்பு: நகராட்சியின் நிதி நிலைக்கேற்ப பணிகள் மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.**

37) **<u>34-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.ர.கார்த்திக் அவர்களால் கொண்டு வரப்பெற்ற தீர்மானம்.</u>**

எனது வார்டுக்கு உட்பட்ட பட்டமங்கலஆராயத்தெருவில் தனி நபர் வீட்டு வாசலில் பொது குடிநீர் குழாய் இருந்தது தற்போது சில மாதங்காளக பொது குடிநீர் குழாய் பழுதடைந்துள்ளது. சுமார் 8 மீட்டர் அளவிற்க்கு மாற்றி அதனை பொது இடத்தில் அமைத்தும் அமைப்பதற்க்கு அனுமதி தருமாறு கேட்டுக்கொள்கிறேன்..

**மன்றத்தீர்மானம் எண். 818, நாள்.29.08.2024**

**அலுவலக குறிப்பு: நகராட்சியின் நிதி நிலைக்கேற்ப பணிகள் மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.**

38) **<u>11-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.ரெ.சபா அவர்களால் கொண்டு வரப்பெற்ற தீர்மானம்.</u>**

எனது வார்டில் மேல ஒத்தசரகில் உள்ள காவேரி ஆற்றகரை மழைநீர் வடிகாலில் புதிய கல்வெட்டு அமைத்து தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**மன்றத்தீர்மானம் எண். 819, நாள்.29.08.2024**

**அலுவலக குறிப்பு: நகராட்சியின் நிதி நிலைக்கேற்ப பணிகள் மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.**

39) **<u>11-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.ரெ.சபா அவர்களால் கொண்டு வரப்பெற்ற தீர்மானம்.</u>**

எனது வார்டில் மேல ஒத்தசரகு மாப்படுகை பாலம் இணைப்பு சாலையில் பழைய பேருந்து நிறுத்தம் சிதைவடைந்து பயனற்ற நிலையில் உள்ளது. உடனே அதனை அகற்றி தருமாறு கேட்டுகொள்ளப்படுகிறது.

**மன்றத்தீர்மானம் எண். 820, நாள்.29.08.2024**

**அலுவலக குறிப்பு: ஏற்றுக்கொள்ளப்பட்டது**

40) **<u>22-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.உஷாராணி ராஜேந்திரன் அவர்களால் கொண்டு வரப்பெற்ற தீர்மானம்.</u>**

எனது வார்டில் மயிலம்மன் நகரில் ஒரு தெருவிற்கு மட்டும் குடிநீர் பகிர்மானக் குழாய் இல்லை. அதில் புதியதாக குடிநீர் பகிர்மானக்குழாய் அமைத்துத் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

எனது வார்டில் பொட்டவெளித்தெருவில் அமைந்துள்ள பொதுக்கழிப்பிடம் மிகவும் மோசமாக உள்ளது. அனைவர் வீட்டிலும் கழிப்பிடம் உள்ளதால் அதனை யாரும் பயன்படுத்துவது இல்லை ஆகையால் அதனை இடித்துத் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**மன்றத்தீர்மானம் எண். 821, நாள்.29.08.2024**

**அலுவலக குறிப்பு: ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

41) **<u>33-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.இரா. நடராஜன் அவர்களால் கொண்டு வரப்பெற்ற தீர்மானம்.</u>**

எனது வார்டில் நகராட்சி மணிமேகலை துவக்கப்பள்ளியின் விளையாட்டு திடல் மிகவும் கரடு முரடாகவும் உள்ளதால் குழந்தைகள் விளையாட மிகவும் சிரமப்படுகிறார்கள். அதனால் அப்பகுதியை சவுடு மண் 10 லோடு கொண்டு பரப்பி சமம் படுத்தி தர மன்றம் தீர்மானிக்க

மேற்கண்ட பள்ளியின் வாசலில் இரவில் கடும் இருட்டாக உள்ளது. அங்கு உள்ள மின் கம்பத்திற்கு கம்பி இழுத்து மின் விளக்கு அமைத்து மன்றம் தீர்மானிக்கலாம்.

**மன்றத்தீர்மானம் எண். 822, நாள்.29.08.2024**

**அலுவலக குறிப்பு: நகராட்சியின் நிதி நிலைக்கேற்ப பணிகள் மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது**

42) **<u>04-வது வார்டு நகர் மன்ற உறுப்பினர் திரு.ச. சிவகுமார் அவர்களால் கொண்டு வரப்பெற்ற தீர்மானம்.</u>**

சீர்காழி மெயின்ரோடில் உள்ள பழுந்தடைந்த பேருந்து நிழற்குடை எந்நேரமும் இடிந்து விழும் அபாயகரமான நிலையில் உள்ளதால் பொது மக்களின் நலனை கருத்தில் கொண்டு அந்த பேருந்து நிழற்குடையினை அகற்றித்தர மன்றம் தீர்மானிக்க.

**மன்றத்தீர்மானம் எண். 823, நாள்.29.09.2024**

**அலுவலக குறிப்பு: ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

**நாள்: 27.08.2024**

**நகர்மன்றத்தலைவர்,**
**மயிலாடுதுறை நகராட்சி.**